உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

நவம்பர் 2020

## உள்ளடக்கம்



| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| தன்னம்பிக்கை உரை | 1 |
| அறிஞர்களின் சிந்தனைகள் | 1 |
| படித்ததில் பிடித்தவை | 1 |
| மாணவர்களின் படைப்பாக்கம் | 2 |
| மாணவர்களின் பல்சுவைப் படைப்புகள் | 3 |
| மாணவர் எண்ணப் பதிவுகள் | 3 |
| செம்மொழியாம் தமிழ்மொழி | 4 |



## தன்னம்பிக்கை உரை

**அன்பு மாணவச் செல்வங்களே!**

வணக்கம். கோவிட்-19 சூழ்நிலை நம் ஒவ்வொருவரின் வாழ்க்கைச் சூழலைப் புரட்டிப் போட்டாலும், தொடர்ந்து கற்றலில் ஈடுபாடு காட்டிவரும் உங்களின் ஆர்வத்தை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. பாராட்டுகள்! உங்களின் ஆர்வத்தை இழந்துவிடாமல் தொடர்ந்து கற்று, சிறப்புத் தேர்ச்சிப் பெற வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு

இதழ்க் குழு

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவ(து)
எங்கும் காணோம் -


பாரதியார்

## அறிஞர்களின் சிந்தனைகள்



- ‘படிப்புதான் ஒருவன் உயர வழி’ என்றார் காமராஜர்.
- ‘புத்தகத்தைப் படித்து முடித்த பிறகே அறுவை சிகிச்சை’ என ஒருநாள் தள்ளி வைத்தார் அறிஞர் அண்ணா.
- ‘புத்தகங்கள் படிப்பதையே வழக்கம் ஆக்குங்கள்’ என்றார் அப்துல் கலாம்.
- ‘ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்’

## படித்ததில் பிடித்தவை



தமிழ்மொழி, ஆங்கிலமொழி இரண்டிலும் திறமைபெற்று, எழுத்தாற்றலிலும் பேச்சாற்றலிலும் பிரகாசிப்பவர்கள் மிகச் சிலரே. அந்த மிகச் சிலருள் ஒருவராகத் திகழ்ந்த பெருமைக்குரியவர் பேரறிஞர் அண்ணா. அடுக்குமொழி பேசுவதிலும் அவர் வல்லவர். ஒருமுறை அண்ணா அவர்கள் இரயிலில் பயணம் செய்தபோது, அருகில் வெளிநாட்டினர் இருவர் அமர்ந்திருந்தனர். அண்ணாவின் தோற்றத்தைப் பார்த்த வெளிநாட்டவரில் ஒருவர், அண்ணாவின் காலை வேண்டுமென்றே மிதித்துவிட்டு ‘சாரி’ என்றார். அண்ணா அமைதியாக இருந்தார். மீண்டும் காலினை மிதித்துவிட்டு ‘சாரி’ என்றதும், “அயாம் நாட் எ லாரி டு கேரி யுவர் சாரி” (I am not a lorry to carry your sorry) என ஆங்கிலத்தில் அடுக்குமொழி பேசி வெளிநாட்டவரை அதிர வைத்தார் அண்ணா. அதன்பின் அந்த வெளிநாட்டவர், அண்ணாவிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு அவரோடு உரையாடிக்கொண்டே பயணம் செய்தார்.

# மாணவர்களின் படைப்பாக்கம்



## தனிமை

வெளிச்சம் இருந்தும் ஒளியில்லை!

பணமிருந்தும் நிறைவில்லை!

நேசத்திற்கு மதிப்பில்லை!

பலரிருந்தும் அன்பில்லை!

உதட்டுச் சிரிப்பிற்கு அர்த்தமில்லை!

காயம்பட்ட மனத்திற்கு மருந்தில்லை!

என் கேள்விக்கு விடையில்லை!

எதையும் தாங்கும் இதயம்

என் தனிமையைத்

தாங்குமா?



**கார்த்திகா - 2 உயர்தமிழ்**

## மனசாட்சியின் புலம்பல்....



அண்டை வீட்டுக்காரர்

நல்லாயிருக்கணும்னு

உலக வரலாற்றிலே

முதன்முதலா நினைக்க வைச்சதே

இந்தக் கொராானோவோட ஹைலைட்!!

**ஸ்ரேயா—3 உயர்தமிழ்**


## வாவரசம் பூவே!



பச்சை நிறக் கிளைகள்
நடுவே அழகிய இலைகள்
உள்ளே சில மலர்கள்
பொன்னிறம் சிவந்த
வண்ணம்
வாவரசம் அதன் பெயர்
குங்கும நிறம் கொண்ட
பூவிதழ்களைச் சுற்றி
உலாவுகின்றன தேனீக்கள்
தேன் பருக!
பார்ப்போர்க்கு விளையாடுவது
போன்ற பாவனை!
புத்துணர்வு தருகின்றது அதன் மணம்
தேனீக்களுக்கு மட்டுமல்ல!
எனக்கும் தான்!
கண்ணுக்கு விருந்தளிக்கும்
இயற்கைக் காட்சி காண்போருக்கு
மன நிறைவைத் தரும்.

**கிஷோர் குமார் - 2 உயர்தமிழ்**

## கோவிட்-19



சீனாவின் வூஹான் நகரில் அவதரித்து

பூமியில் நோயாக உருவெடுத்து

நாடுகளின் மீது தாக்குதல் தொடுத்து

ஏழிரு நாட்கள் குடும்பங்களைப் பிரித்து

எங்களின் சுதந்திரத்தை நிரந்தரமாகப் பறித்து

இம்மானிட இனத்தைப் பெரிதும் அழித்து

பயமும் பதற்றமும் நடுவில் கொடுத்து

வாழ்க்கைப் பாடங்கள் பல கற்றுக்கொடுத்து

சோதனையை வேதனையாக அழ வைத்து

வாழ்வின் நேரத்தை வெறுக்க வைத்து

எப்போது செல்வாயென்று காக்க வைத்த கொரோனாவே! சென்றுவிடு! சென்றுவிடு! திரும்பாமல் சென்றுவிடு!

ஏற்றுவிடு! ஏற்றுவிடு! என் வேண்டுகோளை ஏற்றுவிடு! அகன்றுவிடு! அகன்றுவிடு! இப்பிரபஞ்சத்தை விட்டு அகன்றுவிடு!

கைவிடு! கைவிடு! உன் ஆளுமையைக் கைவிடு!

விட்டுவிடு! விட்டுவிடு!

எம் மானிட குலத்தை விட்டுவிடு! புறப்பட்டு விட்டார்கள் எம் வல்லுனர் உனக்குச் சங்கூத! இந்நாளைக் குறித்துக்கொள்! உன்னைப் போலொருவன் மீண்டும் இப்பிரஞ்சத்தில் பிறப்பதென்பது

கானல் நீரே!

**கிஷோர் குமார் – 2 உயர்தமிழ்**

## மழை

சில்லென்று பெய்யும் மழை!

செடிகளுக்கு உயிர் தரும் மழை!

மண்ணைச் சேறாக்கி விடும் மழை!

சிறுவர்கள் விளையாடும் மழை!

காய்ச்சலை வரவழைக்கும் மழை!

புற்களை உயிர்ப்பிக்கும் மழை!

சூரியன் வந்தால் ஓடிப் போகும் மழை!

**ரித்திகா**
**2 உயர்தமிழ்**



## பெண்



என் அம்மா
அன்பாய்
அழைப்பது
லட்சுமி!

என் அப்பா அழகாய்க்
கூறுவது மகாலட்சுமி!

என் நண்பர்கள் விளம்புவது
தைரியலட்சுமி!

பெருமையில் திளைத்த
என்னை

‘மலடி’ என்ற ஒற்றை
வார்த்தை

என்னை வெற்றுலட்சுமி
ஆக்கி விட்டது!

பெண்ணுக்குப் பெண்ணே
எதிரியாய்

இருப்பது தகுமா?

தலையில் தூக்கி
வைக்கவில்லையென்றாலும்

தூக்கி எறியாதீர்! தாங்க
மாட்டாள்!

**சிவகுமார் ஸ்ரீநிதி**

**2 உயர்தமிழ்**

## பள்ளி



நண்பர்கள்!

அன்பான

ஆசிரியர்கள்!

பழகுவதில் இனிமை!

கற்றுக் கொடுப்பது புதுமை!

கிடைப்பது அன்பும் அறிவும்!

அமுதான

தமிழ்மொழி நிலையம்!

**முகில் சாமி**
**2 உயர்தமிழ்**

## மனமிருந்தால் மார்க்கமுண்டு

எல்லாக் குழந்தைகளையும்போல பிறந்து ஒன்றரை வயது வரை நன்றாக வளர்ந்தார் ஹெலன் ஹெல்லர். திடீரென்று ஒருநாள் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். விளைவு வாய் பேசமுடியாமலும், காது கேட்க முடியாமலும் போனது. வளர வளரத் தன் தேவைகளைக்கூட அவரால் செய்ய முடியவில்லை. எல்லாக் கதவுகளும் மூடப்பட்ட நிலையில் அவர் மீது அன்பைச் செலுத்த ஆசிரியர் வடிவில் ஆன் சல்லிவன் வந்தார். சிறப்புக்கல்வியை அந்தக் குழந்தைக்குப் பொறுமையாய்க் கற்றுத் தந்தார். இடதுகையில் பொம்மையைத் தந்து வலதுகையில் ஆட்காட்டிவிரலால் "பொம்மை" என்று எழுதினார். உச்சரிக்கும்போது உதட்டில் விரலை வைத்து உச்சரிப்பின் அதிர்வை உணர வைத்துப் பேச்சுப் பயிற்சி தந்தார். ஆசிரியரின் விடாமுயற்சியால் ஹெலன் ஹெல்லர் வளர்ந்து எல்லா மேடைகளிலும் பேசினார். தம்மைப்போல் செவித்திறன் குறைந்த ஆயிரக்கணக்கான குழந்தைகளைச் சாதனையாளர்களாய் உருவாக்கினார். அன்று ஆசிரியர் சல்லிவன் இல்லையென்றால் ஹெலன் ஹெல்லர் சாதனையாளராக உருவாகியிருப்பாரா? **ஷகினா - 2 உயர்தமிழ்**

## என்னைக் கவர்ந்த பழமொழிகள்

- ஔவை சொல்லுக்கு அச்சம் இல்லை.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
- காலம் செய்கிறது ஞாலம் செய்யாது.
- கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
- சொல் அம்போ வில் அம்போ?
- தலை இருக்க வால் ஆடலாமா ?
- தருமம் தலைகாக்கும்.
- தவளை தன் வாயாற் கெடும்.

**- வீணா கணேசன் – 2 உயர்தமிழ்**

## பூக்களை அறிவோம்!

- காஷ்மீரில் பூக்கும் மலர்களில் 90 சதவிகித மலர்களுக்கு மணம் கிடையாது.
- பூசணிக் கொடியில் காய்க்கும் பூ, காய்க்காத பூ என்று இரு வகையான பூக்கள் பூக்கின்றன.
- ஆர்க்கெட் செடி முளைத்துப் பூ பூக்க ஐந்து முதல் ஏழு வருடங்கள் ஆகும். ஆர்க்கெட் பூ தமிழில் 'மந்தாரைப் பூ' என்று அழைக்கப்படுகிறது.
- பன்னீர்ப்பூக்கள் இரவில் மலர்கின்றன.
- குறிஞ்சி மலர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மலரும்.
- கற்றாழைப் பூக்கள் ஆண்டிற்கு இருமுறை மலரும்.

## பாட்டி வைத்தியம்

- பல் வலி குறைய – துளசி, மிளகு, உப்பு போன்றவற்றை உண்ணவும்.
- முடி நன்கு வளர – தினமும் கறிவேப்பிலை உண்ணவும்.
- தொண்டை வலி நீங்க – துளசி இலைகளைப் போட்டுக் கொதிக்க வைத்த நீரைக் குடிக்கவும்.

**ந ஶ்ரீநிதி 2 உயர்தமிழ்**

# தேர்விற்குப் பிந்தைய நடவடிக்கைகள் பற்றிய மாணவர்களின் எண்ணப் பதிவுகள்

**புத்தக மதிப்புரை** – நூலகத்தில் புத்தகத்தைப் படித்து அதைத் திறனாய்வு செய்தது புது அனுபவத்தைத் தந்தது. மற்றவர்களின் முன் படைக்கும்போது தன்னம்பிக்கை பிறந்தது. புதிய கலைச் சொற்களைக் கற்றுக்கொள்ள முடிந்தது. **– சாத்விகா – 1 உயர்தமிழ்**

**கவிதை** - கவிதைகளில் இடம்பெறக்கூடிய கூறுகளான எதுகை, மோனை, இயைபு, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்றவை எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதை அறிந்துகொண்டேன் – **வர்ஷினி - 2 உயர்தமிழ்**

**சிறுகதை** – சிறுகதைப் பயிலரங்கு மிகவும் ஆர்வமூட்டுவதாக இருந்தது. இதில் கற்றுக்கொண்ட உத்திகளைக் கட்டுரை எழுதுவதற்குப் பயன்படுத்துவேன். ஒரு சிறுகதையின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அறிந்துகொண்டேன். **– ப்ரீத்தா - 2 உயர்தமிழ்**

**நாடகம்** – இந்த நடவடிக்கை மிகவும் ஆர்வமூட்டுவதாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்தது. குறிப்பாக 'கண்ணாடி முன் விளையாட்டு' என்ற பகுதி என்னை மிகவும் கவர்ந்தது – **நம்ரதா - 2 உயர்தமிழ்**

**பூ கட்டுதல்** – இதுவரை பூ கட்ட முயற்சி செய்ததில்லை. ஏனெனில் யாரும் சொல்லித் தந்ததில்லை. இன்று என் ஆசிரியர் பூ கட்டக் கற்றுத் தந்தது புது அனுபவமாக இருந்தது. இனி தொடர்ந்து பூ கட்ட முயற்சி செய்வேன் – **கௌரி – 1TLB**

**ரங்கோலி** – வண்ணப் பொடிகளை மணலில் கலந்து வண்ணக் கோலங்கள் போட்டது புதுமையான அனுபவமாக இருந்தது – **முகேஷ் – 3 இலக்கியம்**

# செம்மொழியாம் தமிழ்மொழி

## போட்டிகளில் நாங்கள்!

- தேசிய நூலக வாரியம் - பேச்சுப் போட்டி

3ம் பரிசு – ஜஸ்ரா – 3 உயர்தமிழ்

- முத்தமிழ்க்கழகம்

1ம் பரிசு - ஜஸ்ரா 3 உயர்தமிழ்

- காலாங் சமூக மன்றம் - டிக் டோக்

3ம் பரிசு - சிவகுமார் ஸ்ரீநிதி – 2 உயர்தமிழ்

## தமிழும் ஆங்கிலமும்

| | |
|---|---|
| Atomic Power Plant | அணுமின் நிலையம் |
| Democracy | ஜனநாயகம் |
| Bursary | கல்வி நிதி |
| Thumb Drive | விறலி |

## சாதனையாளர்களும் கண்டுபிடிப்புகளும்!

- மின்விளக்கு - தாமஸ் ஆல்வா எடிசன்
- இரத்த ஓட்டத்தின் அளவு - வில்லியம் - ஹார்லி ஹாரிசன்
- ரேடியம், ரேடியோ கதிர்வீச்சு - மேரி கியூரி அம்மையார்
- தொலைக்காட்சி - J. L. பெயர்டு
- பாக்டீரியா - லீவன் ஹூக்

## தமிழும் எண்ணும்

### முத்தமிழ்

இயற்றமிழ்
இசைத்தமிழ்
நாடகத்தமிழ்

### நாற்படை

யானைப்படை
குதிரைப்படை
தேர்ப்படை
காலாட்படை

### ஐம்பூதம்

நிலம் நீர்
காற்று தீ
வானம்

### அறுஞ்சுவை

இனிப்பு புளிப்பு
கசப்பு கார்ப்பு
துவர்ப்பு உவர்ப்பு

‘இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்’

- தமிழ்விடு தூது

மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

பயணம் தொடரும்...